414

சேலம் ஜில்லாவில் கள்ளு…

மதுவிலக்…



சென்னை காங்கிரஸ் தொண்டர்

K. T. R. வேணுகோபால்தாஸ் எழுதியவை

20 APR 1938
MADRAS

சென்னை திருவொற்றியூர்

கலைமகள் பதிப்பு.

காபிரைட் 1938 விலை அணா 1

S. S. விஸ்வநாததாஸ் K. B. சுந்தராம்பாள்

சேலம் ஜில்லாவில் கள்ளரக்கனை ஒழித்த

காங்கிரஸ்

மதுவிலக்கு பாட்டு

...ICE OF THE R...
20 A...

விருத்தம்

சீர்பெரும் பாரத சோதரர் யாவர்க்கும்
பேர்புகழ் சீ ஆர். போதனை உலகினில் கார்பூத்த
துர்குண மதுவையே தூர்த்திட சேலத்தில்
கர்மமே ஒழித்த காந்திமகானுக்கு ஜே.

பிரதம மந்திரி ஸி. ராஜகோபாலாச்சாரியார் பேரில் பாடிய தேசிய பாட்டு

பூங்கா விநோதமே என்ற மெட்டு.

பல்லவி

ராஜாஜீ போலுண்டோ
ராஜாங்கமே புகழும் ரா

தேசமெங்கிலும் தேர்ச்சியானவர்
நேசத்துடனே பாடு பட்டவர் ரா

சட்டச்சபையினில் பட்டமே புகழ்
திட்டத்துடனே தொட்டு பேசிடும் ரா

எங்கும் பொங்கும் தலைவரில்
சிங்கம் தங்கும் உலகினில் ரா

வீரியமாகவே காரிய கமிட்டியில்
சேரிடையாகவே பேச வல்லவர் ரா

ஜாதி பேதமே பாதக மீதென
சாதனை யாகவே போதனை செய்தவர் ரா
...னுடன் ஆழ்ந்த யோசனை
... செய்த பிர்சனை ரா

அநுபல்லவி.

ராஜீ மந்திரியென மண்டலத்தனில்
மேன் மையானவர் ரா

சரணம்.

தேச விடுதலைக்கே பாடுபட வந்தவர்
தாய்நாடு சுகம்பெற தேசவெறி தந்தவர்
மோசமதை ஒழிக்க மந்திரியாய் நின்றவர்
மாநில்லா ஏழைகளின் மனக்குறைதீர்ப்பவர்
சேலம் ஜில்லாவில் புகழ்தொடுத்தார் மதுவை
சீக்கிரத்தில் ஒழிய விடுத்தார் சட்டம்
காலம் அநுசரித்தே படித்தார் எங்கும்
கால் நடையாக சென்று முடித்தார்
கள்ளுகடை போச்சு குடிகள் சுகமாச்சு
கொள்ளைகட்ட மேச்சு வேணுகவி யாச்சு

என்னுங்கோ உங்களைதான் இருப்பது மலைக்காட்டிலே என்ற மெட்டு.

பல்லவி.

பட்டைகள் கஞ்சா போதை
கெட்டதுங்கோ அதை விட்டிடுங்கோ
தொட்டாலே மோசவரும் பின்னால்
தொந்தரவாகிடும் பார்த்திடுங்கோ பட்

அநுபல்லவி

கட்டாயமாகவல்லோ கடைகளில் தானுழைந்து
நீட்டாக குடித்திடுவார்
காட்டிலே பெயர் கெடுத்திடுவார் பட்

தொகையறா

நெற்றிவேர்வை நிலத்தில்விழ பாடுபட்ட
காசையத்தை கொண்டேகுறாங்கோ
நாற்றமே வீசிடும் கள்ளசாடி மதுவை
நன்மையென குடிக்குறாங்கோ

பாட்டு

ஆமாங்கோ சேலத்தில் பாருங்கோ
ஸீ. ஆர். செய்ததை கேட்டிடுங்கோ
பிள்ளைகுட்டி தானமுக பாரினில் உடனே பெருக
கொள்ளையாய் பணம் பரிப்பதால
கூடாதுங்கோ அதை தேடாதிங்கோ ஆம்

தொகையறா

காங்கரேஸ் மந்திரிகள் கீர்த்தியாய் உலகினில்
காலத்தில் மதுவை ஒழிக்க
கங்கணம் கட்டியே கடைகளை மூடிட
கர்ஜனை செய்கிறார் நாம் விழிக்க

பாட்டு

சொன்னுங்கோ காந்திமகானுங்கோ
சுகமாய்யாவரும் வாழ்ந்திடுங்கோ
ஏழைகுடும்பங்களும் ஈடேற நீங்களெல்லாம்
ஏகாத மதுவரக்கனை
ஓட்டிடுங்கோ கதர் கட்டிடுங்கோ
தொனித்திடும் வேணுகோபால் கவி
கேட்டிடுங்கோ கடை பூட்டிடுங்கோ
வீணாக வெறிபிடித்தினி
வேகாதிங்கோ வழி போகாதிங்கோ ஆம்

சரி சரி சாமுத்ரிகாலம் என்றமெட்டு.

பல்லவி.

விடு விடு பொல்லாத
கள் குடியை வி

அநுபல்லவி

அடிமையாக அனுதினமும்
கடமையாக குடிப்பதினால் வி

சரணம்

ஏழைமக்கள் வயிரெரிய மதுபானத்தை அருந்துரீர்
கோழைதனமே விடுத்து சீர்த்தியாக வாழ்குவீர்
புனிதமேயாகும் சாந்தி
போதனையாகும்
சேலம்ஜில்லாவினிலே கள்ளுக்
கடையே அடைத்ததால் விடு

தனத்தைகொடுத்து குணத்தைவிடுத்து வெளியிலே
(திரிகிறீர்
மானம்விட்டுரோட்டுகளில் மதிமயங்கி அலைகுறீர்
போதை ஏனையா போலீஸ்
பிடிப்பதேனையா
லாகாப்பிலே தானடைத்திட
லாகிரி போதை இன்றே வி

பந்துக்கள் மனைவிமக்கள் பாதவிக்க நேருமே
விர்தையாய்கோர்ட்டினிலே மரியாதையின்போகுமே
மானமில்லையா வீண்
ஜாலமேனையா
சந்ததம் வேணுகோபால்
செந்தமிழை உணர்ந்து வி

பண்டித மோதிலால் என்ற மெட்டு.

பல்லவி.

பாழான கள்குடியால் பதியிழந்தனரே
பதியிழந்தனரே சொந்த மனை யிழந்தனரேஜயா ஐய

அநுபல்லவி.

கோழையாய் உலகமதில் கோடான கோடிஜனம்
கிஸ்த்தியாய் கட்டிவாரார் கேவலமிதுவே
கேவலமிதுவே அவ மானமும் மதுவே பா

தொகையறா.

மூதாதிகள் சேர்த்துவைத்தோர் பொருள்களெல்லாம் கடையில்
மொய்யெழுதுவார் ஐயோ
பாதகமாய் கொலைகளவு பாரினில் செய்திட
போதிக்கும் கள் இதுவே
சாதகம் இல்லாத சாராயம் கஞ்சாவை
ஜெகமதில் அருந்தி வீணாய்
மதிமயக்கி பாதையில் மனம்போலே ஏகிட
மண்டூகமாக செய்யும்

பாட்டு.

போக்கிரிதனம் கொடுக்கும் போலீசுக்கே அழைக்கும்
பாதக செயல்தனை போக்கிடுவீரே
போக்கிடுவீரே நீங்கள் சுகமடைவீரே பா

தொகையறா.

இன்றுநாம் காந்தியார் இயம்பிய மொழிபடியே
யெமனை நீர் விடுவீர்
நன்று என்று உண்டாம நாட்டினிற்தனாலே
நன்மையும் பெருவீரே

தொண்டாய் சேர்ந்து கடை அண்டையில் நின்று
தொழுவீர் வருவோரை நீரே
என்றுமே வேணு இனிய மொழிகளையே
பொன் வாக்யமென்று எண்ணு

பாட்டு.

சேலத்திலே நடந்த சட்டமதனைப்போலே
சகல மாகாணங்களும் புகழ்ந்திடுவீரே
புகழ்ந்திடுவீரே யாவர் சேர்ந்திடுவீரே

கண்டியுமேவு நல்ல என்ற லாவணி மெட்டு

சேலம் ஜில்லாவினிலே   கள்ளரக்கன் ஒழிந்த
காரணமான   பேச்சு
கடைகள்   போச்சு
மூட   லாச்சு
ஏழை குடும்பங்களும்   ஏனை கள்குடியை
விட்டிட சுகமாச்சு

பொல்லாத போதையினால்   போலீஸ் பிடித்திட
பார்த்திட   அவமானம்
லஞ்சமும்   வேணும்
வஞ்சமே   காணும்வினைப்
கோர்டினில்சென்று பயின் கட்டிடசெய்யுமந்த
கெட்ட பழக்கம் தன்னும்

காசையாசைவிடாது   கால்நடையாக தினம்
காசை எடுத்து   செல்வார்
கண்டதும்   குடிப்பார்
கெர்வமும்   பிடிப்பார் வீட்டு
பெண்டுகளிடம்வந்து பலவாறெனவேபேசி
பங்கமில்லாது அடிப்பார்

கூலிவேலைகள் செய்யும் ஏழைகுடும்பங்களும்
கட்டாயமாக குடித்து
கஷ்டமே பிடித்து
பிள்ளைகள் விடுத்து சொர்க்க
பெண்சாதி வேண்டாமென சோம்பேரியாகவினர்
பரதேசி வேடம் தரித்து

ராஜகோபாலாட்சி ராஜாங்கசட்டமொன்று
ரமிகரமாக தானே
சேலத்தில் கோனே
பிரசாரம் தானே ஓராம
சுத்தாகாரமெல்லாம் ஜெயக்கொடியே பறக்க
வேணு கவிகள் சிரக்க

கள்ளுக்கடைகளெல்லாம் டீ கடையாக மாற்றி
சேலத்தில் புகழாச்சு
லீ ஜூரின் பேச்சு
சந்தோஷ மாச்சு இந்த
சேதி உலகமெங்கும் சீக்கிரம் பரவிட
சோதரர் மகிழாச்சு

சுருசுருப்பையே தரும் சூடான பானமதை
யாவரும் அருந்திடுவீர்
சுகமே அடைவீர்
ஜெகத்தில் மகிழ்வீர் இந்த
பாரதநாட்டினில் பட்டினி அதைபோக்க
பாடுபடவே வருவீர்.

சிறைகுட் புகுந்த மனமே என்ற மெட்டு

மதுவையருந்த வேண்டம் உலகினில்
மண்டேமோக வேண்டாம் நீங்கள்
பாதகம் செய்ய வேண்டாம் பிள்ளைகள்
பாரில் அலைய வேண்டாம் போதையினல்

தொகையரு

மாடுபட்ட பொருள்களை பாரினில் சேர்க்காது
பாழான கள்ளானுக்கே கொடுத்து
கடுமையாய் அனுதினம் கப்பணம் கட்டியே
குடிக்குரீர் மணம் தொடுத்து

பாட்டு

பெஞ்சாதி பிள்ளையழுக	குடுப்பத்தார்
புத்திகள்புகழ்ந்துரைக்க	காட்டினில்
பஞ்சத்தால் எங்கும் துடிக்க	அனுதினம்
போகுறீர் கள்ளை குடிக்க	மதிமயங்கி

தொகையரு

சேலத்தில் ராஜாஜீ சுற்றுபிரயாணத்தில்
சந்தோஷமான காக்ஷி
காலத்தில் பெண்டுகள் கரகோஷம் செய்துமே
கவலை ஒழிந்ததென உரைத்தார்

பாட்டு

சத்தியம் செய்திடுவீர்	இனியாகிலும்
சுத்தமாய் நடந்திடுவீர்	காந்தியின்
சித்தி பரவச் செய்வீர்	வேணுகவி
சுகமுடன் பாடிடுவீர்	

முற்றிற்று.

K. M. V. Press, Tiruvottiyur 1938

இதர புத்தக விளம்பரம்

பட்டணத்தார் புராண வசனம் படத்துடன்	0	2
பாப்புதாசன் லாவணி (முதல் பாகம்)	0	4
2-பாகம் சேர்த்தது ஒரேகட்டடம்	0	8
கருப்பணபிள்ளை லாவணி ஒப்பாரி	0	2
அம்மைநாத பாவலர் இயற்றிய		
ஷை சதாமிர்தக் கீதம்	0	1
ஷை சமூக சீர்திருத்த கீதம்	0	1
துரைராஜன் (செந்தமிழ் கீர்த்தனை)	0	1
இரண்டு பாகம்	0	1
சன்மார்க்க போதனாமிர்தக்கீதம்	0	1
மதுரை சொக்கநாதர் பிட்டுக்கு மண்சுமந்த நொண்டிச்சிந்து	0	1
வாதவூரடிகள் புராணவசனம்	0	2
வேளாங்கண்ணி ஏசுநாதர் கீதம்	0	1
சுப்பிரமணியர் பழனிப்பாட்டு	0	1
அற்புத கலியுக முருகன் கீர்த்தனை	0	1

எமது விலாசம்—

கலைமகள் விலாச புத்தகசாலை

திருவொற்றியூர் சென்னை